

நகர் ஊரமைப்பு துறை (DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர் மாவட்டம்
பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றியம்
கோமங்கலம்புதூர் ஊராட்சி

கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோமங்கலம்புதூர் ஊராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண்:379/2A2-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்க்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1: 500 (திட்டமில்லாப்பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: EWON7XEP, நாள்:13.09.2023

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 2.40 ஏக்கர் (அ) 9712.0 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 39

மனைப்பிரிவின் எல்லை.....

நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை.....

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை):

I. மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 3092.75 ச.மீ

II. பூங்கா

பூங்காவிற்கு தேவையான பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு)X10%

: (9712.00 - 3092.75) X 10% = 661.93ச.மீ

ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு அல்லது : 674.25ச.மீ (10%) (பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகை ரூ.1,14,512.00/-னை உரிய அரசு கணக்கு தலைப்பில் 16-10-2023 அன்று செலுத்தியுள்ளார்)

III. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

(A) LOCALBODY-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9712.00 - 3092.75) X 0.5% = 33.10ச.மீ (0.50%)

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 52.26ச.மீ (0.79%)

(B) TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9712.00 - 3092.75) X 0.5% = 33.85ச.மீ (0.50%)

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 53.49ச.மீ (0.81%)

கட்டிட வரம்பு : 9.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு : 12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.0மீ முதல் 30.50மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசானை எண்:18 ந.நி(ம)கு.வ.துறை நாள் 04.02.2019 மற்றும் அரசானை எண்:16 ந.நி(ம)கு.வ.துறை நாள் 31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சிக்கான பொது உபயோக ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கும் TANGEDCO-க்கான பொது உபயோக ஒதுக்கீட்டினை TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. அரசானை எண்: 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020 ன் படி, உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படைவசதிகளை மனுதாரரால் அமைக்கப்பட்டு, அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கபடல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும். எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால். மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும். விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ X 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப் படவேண்டும்.
7. நலிவடைந்த பிரிவினருக்காக மனைகள் 1-13, 88-96, 99-108 ஆகியவற்றை மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற மூன்று வருடங்களுக்குள் மனை ஒருங்கினைப்பு செய்யக்கூடாது.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர், உத்தேச சாலைகளின் தரம் குறித்து ஊராட்சி ஒன்றிய பொறியாளரிடமிருந்து தகுதிச் சான்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

SWP / DTCP / COIMBATORE / LAYOUT NO: 313/2023

S.திவ்யா
அளவர்/உதவி வரைவாளர்

M.வளர்மதி
மேற்பார்வையாளர்

Signature Not Verified
Signed by Joint Director
Location:Coimbatore
Date:2023.10.20 17:53:35

இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கோயம்புத்தூர்